**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 107/2018**

**Deposition of P.W.** 7

Name : டாக்டர். திருமதி. அமுதா

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:04.12.2024

Accused Present.

<u>முதல் விசாரணை</u>–

நான் தற்போது குளச்சல் அரசு மருத்துவமனையில் தலைமை குடிமை மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன், இதற்கு முனன்ர் பத்மனாபபுரம் அரசு மருத்துவமனையில் மருத்துவராக பணிபுரிந்த போது 26.03.2014ம் தேதி மதியம் 02.45 மணிக்கு நான் பணியில் இருந்த போது 28 வயதான ஸ்டேன்லி என்பவர் என்னிடம் சிகிச்சைக்காக வந்தார். அவர் என்னிடம் அடையாளம் தெரிந்த ஒரு நபர் அவரை அரிவாளால் அன்று காலை 10.30 மணிக்க நெல்லிகுற்றிபாறைவிளை என்ற இடத்தில் வைத்து தாக்கியதாக கூறினார். நான் அவரை பரிசோதித்து பார்த்த போது அவர் சுயநினைவுடன் இருந்தார். அவருக்கு கீழ்கண்ட காயங்கள் இருந்தன.

1) இடது முன்கையில் 4 cm நீளத்தில் தோல் அளவு ஆழத்தில் வெட்டுக்காயம் காணப்பட்டது.

அவருக்கு மேற்படி காயத்திற்கு வெளிநோயாளியாக சிகிச்சை வழங்கினேன். அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சான்று வழங்கினேன். அந்த காயச்சான்று அ.சா.ஆ.2. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

காயத்தில் ரத்தப்போக்கு இல்லை. மேற்படி காயம் தன்னிச்சையாக ஏற்படுத்தி கொள்ள வாய்ப்பு உள்ளது. காயம்பட்டவர் எதிரியின் பெயரை குறிப்பிட்டு சொல்லவில்லை. காயம்பட்டவர் பொய்யாக தன்னால் ஏற்படுத்தப்பட்ட காயத்தை வைத்து என்னிடம் சிகிச்சைக்கு வந்தார் என்றால் சரியல்ல. பொதுவாக காயம்பட்டு சிகிச்சைக்கு வரும் நபர்களிடம் காயம் எவ்வாறு ஏற்பட்டது என்று விசாரிப்பது உண்டு. போலீசார் மெமோவில் எதிரியின் பெயர் குறிப்பிடப்படவில்லை. ஆயுதம் எதையும் நான் பார்க்கவில்லை.